உ

கடவுள் துணை.

குமரகுருசுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்ட

மதுரை

# மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

மூலபாடம்.

இஃது,

திருத்தணிகைச்,

சரவணப்பெருமாளையரவர்களால்

பரிசோதித்து - அச்சிற்பதித்த பிரதிக்கிணங்க

குவளைமாநகரம்,

ஸ்ரீநிவாசமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

பரமசிவமங்கலம்,

முநிசாமிமுதலியாரால்

தஞ்சாவூர்

கன்னையசெட்டியாரவர்களது

இந்துவித்தியாநிலய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1866.

# விளம்பரம்.

இதனால் யாவருக்கு மறிவிப்ப தியாதெனில், சென்னப்பட்டணம்-பெத்திநாயகன்பேட்டை - முல்லாசாகிபு தெரு கிழண்டைசந்து - தென்னண்டைவாடை-முதலாவது - நெம்பர் வீட்டில் - ம-ா-ா-ஸ்ரீ-குவளைமாநகரம், ஸ்ரீநிவாசமுதலியாரவர்களால் பார்வையிடப்பட்டு - அச்சிற்பதிப்பித்த பலவித தமிழ்ப்புத்தகங்கள்-வேண்டியவர்கள் பரம்சிவமங்கலம்-முநிசாமிமுதலியா ரவர்களிடத்தில் விலைசகாயமாய் வாங்கிக்கொள்ளலாம்.

கடவுள் துணை.

# மதுரை-மீனாட்சியம்மை

## பிள்ளைத்தமிழ்.

### விநாயகக்கடவுள் துதி.

கார்கொண்டகவுண்மதக் கடைவெள்ளமுங் கட்கடைக்கடைக்கன
லுமெல்லை, கடவாதுதடவுக் குழைச்செவிமுகந்தெறி கடைக்காறிரட்
டவெங்கோன், போர்கொண்டவெண்டோட் பொலன்குவடுபொதியு
ம்வெண் பொடிதுடியிடித்துவைத்துப், புழுதியாட்டயராவோ ரயி
ராவணத்துலவு போர்க்களிற்றைத்துதிப்பாந், தார்கொண்டமதிமுடி
யொருத்தன் றிருக்கண்மலர் சாத்தக் கிளர்ந்துபொங்கித், தவழுமிள
வெயிலுமழ நிலவுமளவளவலாற் றண்ணென்று வெச்சென்றுபொன்;
வார்கொண்டணிந்தமுலை மலைவல்லிகர்ப்பூர வல்லியபிராமவல்லி,மா
ணிக்கவல்லிமரகதவல்லியபிடேக வல்லிசொற் றமிழ்தழையவே...✽

## காப்புப்பருவம்.

### திருமால் துதி.

மணிகொண்ட நெடுநேமி வலயஞ்சுமந்தாற்று மாசுணச் சூட்டு
மோட்டு, மால்களிறுபிடர்வைத்த வளரொளிவிமானத்து வாலுளை
மடங்கருங்கு, மணிகொண்டபீடிகையினம்பொன்முடி முடிவைத்
தெண்மையனொடு வீற்றிருந்த, அங்கயற் கண்ணமுதை மங்கையர்க்கர
சியையெ மம்மனையை யினிதுகாக்க, கணிகொண்டதண்டுழாய்க் கா
டலைத்தோடுதேங் கலுழியாய்த் தளறுசெய்யக், கழனிபடுநடவையிற்
கமலத்தணங்கரசொர் கையணை முகந்துசெல்லப், பணிகொண்ட
மூடவுப் படப்பாய்ச்சுருட்டுப் பிணைத்தோ ளொருத்தலைப்பப், பழ
மறைகண்முறையிடப் பைந்தமிழ்ப்பின்சென்ற பச்சைப் பசுங்கொ
ண்டலே.......................................................... (க)

## பரமசிவன் துதி.

சிகரவடவரை குனியநிமிர்தரு செருவிலொருபொருவில்லெனக் கோட்டினர்; செடிகொள்பறிதலை யமணொடெதிர் செலவோர் மதலைசொல் வையையிற்கூட்டினர், திருவுமிமையவர் தருவுமரவொலி செயவலவர்கொளநல்குகைத்தீட்டினர், சிறியவெனதுபுன் மொழியும் வடிதமிழ் தெரியுமவர்முதுசொல்லெனச் சூட்டினர், பகருமிசை திசை பரவவிருவர்கள் பயிலுமியறெரி வெள்வளைத்தோட்டினர், பசியவறுகொடு வெளியநிலவிரி பவளவனமடர் பல்சடைக் காட்டினர், பதுமமுதல்வனு மெழுதவரியதோர் பனுவலெழுதிய வைதிகப்பாட்டினர், பரசுமிரசித சபையிடையிடு பரதப்பதயுக முள்ளம்வைத்தேத்துதும்; தகரமொழுகிய குழலுநிலவுமிழ் தரளநகையு மெனைமயேலைப்பார்த்தெதிர், சருவியமர்பொரு விழியுமறுகிடை தளரவளர்வதோர் செவ்விமுற்றுக்கன, தனமுமனனுற வெழுதியெழுதரு தமது வடிவையு மெள்ளிமட்டூற்றிய, தவளமலர்வரு மிளமின்றுதிசெத தளமின்வழிபடு தையலைத்தூத்திரை, மகரமெறிகட லமுதையமுதகு மழலைபழகிய கிள்ளையைப்பேட்டன, மடலநடைபயில் பிடியை விரைசெறி வரைசெய்புயமிசை வையம்வைத்தாற்றிய, வழுதியுடைய கன்னி மணியொளிரவுபெண் மணியையணிதிகழ் செல்வியைத் தேக்கமழ்ம தூரமொழுகிய தமிழினியல்பயின் மதுரைமரகத வல்லியைக் காக்கவே.......................................................(உ)

## சித்திவிநாயகர் துதி.

கைத்தலமோடிரு கரடக்கரைத்திரை, சக்குகடாமுடைக் கடலிற் குளித்தெமர், சித்தமதாமொரு தறியிற்றுவக்குறு, சித்திவிநாயக னிசையைப்பழிச்சுதும், புத்தமுதோவருடழையத்தழைத்ததோர், பொற்கொடியோவென மதரித்துவட்டெழு, முத்தமிழ்த்தேர்தரு மதுரைத்தலத்துறை, மூத்தனயேவுபெண் ணரசைப்புரக்கவே......... (௩)

## முருகவேள் துதி.

பமரமடுப்பக் கடாமெடுத் தூற்றுமோர், பகடுநடத்திப் புலோமிசைச்சூர்ப்புயல், பருகியிடக்கற் பகாடவிப்பாற்பொலி, பரவையிடைப்பதும மாதெனத்தோற்றிபு, குமரிமிருக்கக் கலாமயிற்கூத்தயர்,

குளிர்புனமொய்த்திட் டசாரலிற்போய்ச்சிற, குறவர்மகட்குச் சல
மிட்ற்கேக்கற, குமறனைமுத்துக் குமாரனைப்பேரற்றுத், மிமிழ்திரை
முற்றத்து மேருமத்தார்த்தமுள், ளெயிறுகுநச்சுப் பணுடவித்தாப்
பிசைத், திறகவிறுக்கித் துழாய்முடித்தீர்த்தனே, செவ்வருமதித்துப்
பராபவத்திச்சுட, வழுதுசெய்வித்திட் ட.போனகத் தாற்சுடர், ரடரு
மிருட்டுக் கிரீவமட்டாக்கிய, வழகியசொக்கற்கு மால்செயத்தோட்டி
கல், லமர்செய்கயற்கட் குமாரியைக்காக்கவே..................(௪)

நான்முகன் துதி.

மேகப்பசுங்குழவி வாய்மடுத்துண்ணவும் விட்புலம் விருந்தயர
வும், வெள்ளமுதம்வீசுங் கருந்திரைப்பைந்துகில்விரித்திடுத்துத் திவி
ரிபு, நாகத்துமீச்சுடிகை நடுவட்கிடந்தமட நங்கையைப் பெற்றமற்
றந், நாகணைத்துஞ்சுதன் றந்தைக்குவந்துதவு நளிநக் குழந்தைகாக்க,
யாகத்துமரகதக் குன்றென்றோர்தமனியக் குன்றுடுகிளைத்துநின்ற,
ப்வளத்தடங்குன் றளக்கண்ணதென்றப் பரஞ்சுடர் முடிக்குமுடிமூ
ன், றகத்தமைத்துப்பி ஞெருமுடிதன்முடிவைத் தணங்கரசு வீற்றி
ருக்கும், அபிடேகவல்லியை யளிக்குலமுழக்குகுழ லங்கயற் கண்
ணமுதையே.............................................. (௫)

தேவேந்திரன் துதி.

சுழியுக்கருந்தட் குண்டகழிசுவற்றுஞ் சுடற்வேற்கிரிதிரித்த,தோன்
றற்களித்துச் சுறவுயர்த்த சொக்கப்பெருமான்செக்கர்முடி, பொழி
யுந்தரங்கக் கங்கைவிரா புனல்கால்பாய்ச்சத் தழைந்துவிரி, புவனந்
தனிப்பூத் தருள்பழுத்த பொன்னைக்கொடியைப் புரக்கவழிந், திழி
யுந்துணரிக்கற் பகத்திறைறவிதழ்த்தேன் குடித்துக்குமட்டியெதி, ரொடு
க்குஞ்சிறைவண் டுவட்டுறவுண் டிளைக்கக்களாக்கு மதச்சுழிக், குழி
யஞ்சிறுகணேற்றுருமுக் குரல்வெண்புயலுங் கரும்புயலும், குன்றங்
குலைய வுதைத்தேறுங் குலிசத்தடக்கைப் புத்தேளே.........., (௬)

திருமகள் துதி.

வெஞ்சூட்டுநெட்டுடல் விரிக்கும்படப்பாயன் மீமிசைத்துஞ்சு
நீல, மேகத்திருகத்து விடுசுடர்ப் படலைமணி மென்பர ஞ்றத்தநோ
த்து, பஞ்சூட்டுசீரடிபதைத்தமதஞ் வெங்கதிர் படுமிள வெயிற்கு

டைந்தும், பைந்துழாய்க் காடுவிரி தண்ணிழ லொதுங்குமோர் பசுங்
கொடியை யஞ்சலிப்பாம், மஞ்சூட்டகட்டுநெடுவான்முகடு திருவு
மொற்று மறையோதிமஞ்சலிக்க, மதிநிலாச்சிறைவிரியு மாயிரமுகக்
கடவுண் மந்தாகினிப்பெயர்த்த, செஞ்சூட்டு வெள்ளோதி மங்குடி
யிருக்கும் வளர்செஞ்சடைக் கருமிடற்றுத், தேவுக்குமுன்னின்ற தெ
ய்வத்தை மும்முலைத் திருவைப் புரக்கவென்றே ................ (௭)

## கலைமகள் துதி.

வெள்ளித் தகட்டுநெட் டேடவிழ்த் தின்னிசை விருப்புஞ் சுரு
ம்பர்பாட, விளைநறவுகக்கும்பொலன் பொகுட்டலர்கமல வீட்டுக்
கொழித்தெடுத்துத், தெள்ளித்தெளிக்குந்தமிழ்க்கடலினன்பினைந்திணை
யென வெடுத்தவிறைநூற்- றெள்ளமுது கூட்டுணுமொர் வெள்ளோ
திமத்திரு சிறடிமுடிப்பம்வளர்பைங், கிள்ளைக்குமழலைப்பசுங்குத
லையொழுகுதீங் கிளவியுங் களிமயிற்குக், கிளரிளஞ்சாயலு நவ்விக்கு
நோக்கும்விரி கிஞ்சுகச் சூட்டரசனப், பிள்ளைக்குமட நடையுமுட்
னுடு மகளிர்க்கொர் பேதைமையுமுதவிமுதிராப், பிள்ளைமையின் வள்ள
ன்மை கொள்ளுமொரு பாண்டிப்பிராட்டியைக் காக்கவென்றே (௮)

## காளி துதி.

வடிப்பட்ட நுனைக்குடுமி வடிவேறிரித்திட்டு வளைகருங் கோட்டுமோ
ட்டு, மதிடங்கவிழ்த்துக்கடாங்கவிழ்க்குஞ்சிறுகண் மூரல்யானை வீங்க
வாங்குந் துடிபட்டகொடி நுண்ணுசுப்பிற் குடைந்தெனச் சுடுகடைக்
கனலிதூல்டுஞ், சுழல்கண்முடங்குளை மடங்கல்யுகைத்தேறு சூரரிப்
பிணவுகாக்க, பிடிபட்ட மடநடைக் கேக்கற்ற கூந்தற் பிடிக்குழாஞ்
சுற்றவொற்றைப், பிறைமருப் புடையதோர் களிற்றினைப் பெற்றெந்
னைமிட்டுவ்வு சட்டுவ்வதின், நடிபட்ட திருமேனி குழையக்குழைத்
திட்ட வணிமணிக்கிப்புரிக்கோ, டாகத்த தாகக்கடம்பா டவிக்குள்வி
யாடுமொர் மடப்பிடியையே ........................ (௯)

## சத்தமாதர்கள் துதி.

கிடகவிழுதவுபோய்மிசைப் பேர்த்தவள், கவிகுவி துறுகலின்வா
ரியைத் தூர்த்தவள், கடல்வயிறெரிய வொள் வேலினைப்பார்த்தவள்
கடிகமழ் நறுமலர் தார்முடிச்சேர்த்தவள், இடிபுகவடலரி யேறுகைத்

தார்த்தவள், எழுத ருமுழுமறை நாலினிக்கூர்த்தவள், எயிறுகொடு
தெழு பாரினிப்பேர்த்தவள், எனுமிவ ரெழுவர்கடாண்முடிச் சூட்டு
தும் குடமொடுகுடவியர் பாணிகைக்கோத்திடு, குரவையுமல்தொ
ர்பணைமுடிச் சூட்டருள், குதிகொள நடமிடு பாடனுக்கேற்பவோர்,
குழலிசைபழகளி பாடிடக் கேட்டுடை, மடலவிழ்துளபநறுவெடுத்
தூற்றிடமழகனி றென வெழுகார்முகச்சூர்புயல் வரவருமிளைய குமா
ரியைக்கோட்டெயின், மதுரையில் வளர்கவு மாரியைக்காக்கவே (௰)

## முப்பத்துமூவர் துதி.

அமரில்வென்னிடு மவுதியர்பின்னிடுமோ ரபயர்முன்னிடு வனத்
தொக்கவோடவும், அளவுமெய்ம்புடைய திறையிதென்னமுடி யாச
ரொண்ணிலரோர் முற்றத்துவாடவும், அகிலமன்னரவர்திசையின்மன்
னரிவ ரமரரென்னுமூனா திக்கெட்டுமூடவும், அமுதவெண்மதியின்
மரபையுன்னியுனி யலரியண்ணன்முழு வெப்பத்துமூழ்கவும், குமரி
பொன்னிவையை பொருநை நன்னதிகள் குதிகொள் விண்ணதியின்
மிக்குக்குலாவவும், குவடுதென்மலையி னிகரதின்மைகரர் குடிகொள்
பொன்மலை துதித்துப்பராவவும், குமரர்முன்னிருவரமரரன்னையிவள்
குமரியின்னமு மெனச்சித்தர்பாடவும், குரவைவிம்மவர மகளிர்மன்
னிலெழில் குலவுகன்னியர்கள் கைக்கொக்கவாடவும், கமலமுன்னியிடு
மரசமன்னவெழு கடலின்னமுட னட்புக்கைகூடவும், கரியசெம்ம
லொடு மிளயசெம்மல்விடு கருடன்மஞ்ஞையொடோர் கட்சிக்கு
ளூடவும், கடவிவிண்ணரசு நடவும்வெம்முனைய களிறுகைம்மலைசொ
ல் கொப்பத்துவீழவும், கனகமன்னுதட நளினிதுன்னியிரு கமலமின்
னுமொரு பத்மத்துன்மேவவும், இமயமென்னமனு முறைகோடே
ன்னருமெ மிறையை நன்மரு கெனப்பெற்றுவாழவும், எவர்கோல்
மண்ணவர்க ளெவர்கோல்மண்ணவர்க ளெதுசொல்பொன்னுலகெ
னத்தட்டுமாறவும், எழில்செய்தென்மதுரை தழையமும்முலைபொ
டெழுமெனம்மனை வனப்புக்கொர்காவலர், இருவரொண்மர்பதி னொ
ருவர்பன்னிருவ ரெனுமவிண்ணவர்கண் முப்பத்துமூவரே... (௰௪)

காப்புப்பருவம்முற்றுப்பெற்றது.

## செங்கீரைப்பருவம்.

நீராட்டியாட்டுபொற் சுண்ணந் திமிர்ந்தள்ளி நெற்றியிற் றெட்டிட்டவெண், ணீற்றினொடுபுண்டரக்கீற்றுக்கு மேற்றிடவொர் நித்திலச்சுட்டிசாத்தி, தாராட்டு சூழியக்கொண்டைப்பு முடித்துத்தலைப்பணி திருத்தி முத்தின்-றண்ணொளி ததும்புந் ததம்பையொடுகாதுக்கொர் தமனியக்கோப்புமிட்டுப், பாராட்டு பாண்டிப்பெருந்தேவி திருமுலைப் பாலமுத மூட்டி யொருநின்-பானுறுகுமுதங் கனிந்தூறுதேறறன் பட்டாடை மடிநனைப்பச், சீராட்டி வைத்துமுத் தாடும் பசுங்கிள்ளை செங்கீரையாடியருளே -தென்னற்கும்பொன்மலை மன்னற்குமொருசெல்வி செங்கீரையாடி யருளே..........................(க)

உண்ணிலா வுவகைப் பெருங்களி துளும்பநின் றன்றிருத் தாதை நின்னை-ஒருமுறை கரம்பொத்தி வருகென வழைத்திடுமுன்னோடித் தவழ்ந்துசென்று, தண்ணுலாமழலைப் பசுங்குதலை யமுதினிய தாய் வயிறு குளிர வூட்டித் - தடமார்ப நிறைகுங் குமச்சே றளைந்து பொற்றோடோய் தடக்கை பற்றிப், பண்ணுலா வடிதமிழ்ப்பைந்தாமம் விரியும் பணைத்தோ ளெருத்த மேறிப்- பாசொளிய மரகதத் திருமேனி பச்சைப் பசுங்கதிர் ததும்ப மணிவாய்த், தெண்ணிலா விரிய நின் றாடும் பசுந்தோகை செங்கீரை யாடியருளே, தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி செங்கீரையர்டியருளே...(உ)

சுற்றநெடுநேமிச் சுவர்க்கிசைய வெட்டுச் சுவர்க்கா னிறுத்திமேருத் - தூணென்று நடுநட்டு வெளிமுகடு மூடியிரு சுடர்விளக்கிட்டுமுற்ற, எற்றுபுன லிற்கழுவு புவனப்பழங்கல மெடுத்தடுக் கிப்புதுக்கூ, ழின்னமுத முஞ்சமைத் தன்னைநீ பன்முறை யிழைத்திடவழித் தழித்தோர், முற்றவெளி யிற்றிரியு மத்தப் பெரும்பித்தன் முன்னின் றுதொர்தமிட்டும், முனியாதுவைகலு மெடுத்தடுக்கிப்பெரிய மூதண்ட கூட மூடும், சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை செக்கீரையாடியருளே, தென்னற்கும்பொன்மலை மன்னற்குமொருசெல்வி செங்கீரையாடியருளே.....................................(ங)

மங்குல்படு கந்தரச் சுந்தரக்கடவுட்கு மழகதிர்க் கற்றைசுற்றும், வர்ணயன மூன்றுங் குளிர்ந்தமுதக் கலைதலை மடுப்பக்கடைக்கணோக்கு ம், பொங்குமதர் நோக்கிற் பிரந்தவானந்தப் புதுப்புணரி நீத்தமை யன், புந்தித்தடத்தினை நிரப்பவழி யடியர்பாற் போககா சரமடுப்ப, அங்கணெடுஞாலத்து வித்தின்றிவித்திய வனைத்துயிர்க ளுந்தளிர்ப்ப, அருண்மடை திறந்துகடை வெள்ளம்பெருக்கெடுத் தலையெறிந் துக ளவுகளுஞ், செங்கயில்கிடக்குங் கருங்கட்பசுந்தோகை செங்கீரை யா டியருளே, தென்னற்கு மம்பொன்மலை மன்னற்குமொருசெல்விசெ ங்கீரை யாடியருளே.......................................(௪)

பண்ணாருவருமிடற் றறுகான் மடுப்பப் பசுந்தேற லாறலைக்கும், பதுமபீடிகையுமுது பழமறைவிரிந்தொளி பழுத்தசெந் நாவுமி மையாக், கண்ணாரு மரகதக் கற்றைக்கலாமஞ்ஞை கன்முகி ரதும்ப வேங்கும், கார்வளையும் வெள்ளெனவொர் கவினிடா டத்துவளர் கர்ப் பூர வல்லிகதிர்கால், விண்ணாரு மதிமுயற் கலைகிழிந் திழியமுத வெள் ளருவி பாயவெடிபோய், மீளுந்தகட்டகட் டிளவாளை மோதமுகை விண்டொழுகு முண்டகப்பூந், தெண்ணாரு வருவிபாய் மதுரமா கதவல்லி செங்கீரை யாடியருளே, தென்னற்கு மம்பொன்மலை மன் னற்குமொருசெல்வி செங்கீரை யாடியருளே.................. (௫)

முகமதி யூடெழு நகைநிலவாட முடிச்சூழியமாட, முரிபுருவக் கொடி நுதலிடுசுட்டி முரிப்போ டசைந்தாட, இகல்விழிமகரமு மம் மகரம்பொரு மிருமக ரமுமாட, இடுநூபுரவடி பெயரக்கிண்கிணை ணுங்கின் கிணியாடத், துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்குறு வண்டுதுவண்டாடத், தொந்தி சரிந்திட வுந்திகரந்தொளிர் சூலுடை யாலிடைமற், றகில சராசர நிகிலமொடாடிட வாடுகசெங்கீரை, அவ னி தழைந்திட மவுலிபுனைந்தவ ளாடுகசெங்கீரை..................(௬)

தனைசந்திடு கொங்கை யிரண்டல தெனவுளாதருதிரு மார்பாடத், தாய்வருகென்பவர் பேதைமைகண்டு தரும்புபு னகையாடப், பசை ந்திடுஞால மலர்ந்தமை வெளி[illegible]யோர் பச்சுடல் சொல்லவுமோர் பைங்கொடி பொல்கவு மொல்கி நடக்கியபண்டி சரிந்தாட, இசை ந்திடு தேவை நினைந்தன [illegible]ல்ன விரங்கிடு மேகலையோ, டிடுகிடை

மாடவியற்கை மணம்பொழி யிதழ்வழி தேறலினோ, டசைந்தொசிகி
ன்றபசுங்கொடி யெனவினி தாடுக செங்கீரை, அவனிதழைந்திட மவு
லிபுனைந்தவ ளாடுகசெங்கீரை.............................. (௭)

பரிமள மூறிய வுச்சியின் முச்சி பதிந்தா டச்சுடர் பொற், பட்ட
முடன்சிறு சுட்டியும் வெயிலொடு பணிவெண் ணிலவாடத், திருநுத
ன் மீதெழுகுருவெயர்வாடத் தெய்வமணங்கமழுந், திருமேனி யின்
முழுமரகத வொளிவெண்டிக்கும் விரிந்தாடச், சருவிளை நாறுகுதம்
பை ததும்பியகாது தழைந்தாடக், கதிர்வெண் முறுவலரும்ப மலர்
ந்திடு கமலத்திருமுகநின், னருள்விழி யொடும்வளர் கருணைபொழி
ந்திட வாடுக செங்கீரை, அவனி தழைந்திட மவுலிபுனைந்தவ ளாடுக
செங்கீரை.............................................(௮)

குருமணி வெயில்விட மரகத நிழல்விரி குன்றேநின்றூதும், குழ
லிசைபழகிய மழைமுகி லெழவெழு கொம்பே வெம்பாசம், மருவி
யபிணிகெட மலைதரு மருமை மருந்தே சந்தானம், வளர்புவனமு
முணர்வரு மருமறையின் வரம்பேசெம்போதிற், கருணையின் முழு
கியகயறிரிபசிய கரும்பேவெண்சோதிக், கலைமதிமரபி லொரிளமதி
யெனவளர்கன்றே யென்றேதும், திருமகள் கலைமகடலை மகண்மலை
மகள் செங்கோ செங்கீரை, தெளிதமிழ்மதுரையில் வளருமொரிளம
யில் செங்கோ செங்கீரை.......................................(௯)

சங்கு கிடந்த தடக்கை நெடும்புய றங்காய் பங்காயோர், தமனி
யமலைபடர் கொடியெனவடிவுதழைந்தா யென்தாயென், றங்கணெ
டும்புவனங்க டொழுந்தொறு மஞ்சேலென்றோதும், அபயமும் வர
தமுமுபயமு முடைப்பவணங்கே வெங்கோபக், கஞ்குன் மதங்கய
மங்குலடங்க விடுங்காமன் சேமக், கயல்குடிபுகுமொரு துகிலிகை
யெனநின் கண்போலுஞ்சாயற், செங்கயறங்குபொலன் கொடிமின்
கொடி செங்கோ செங்கீரைதெளிதமிழ் மதுரையில் வளருமொரிளம
யில் செங்கோ செங்கீரை.......................................(௰)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

# தாலப்பருவம்.

---

தென்னன்றமிழினுடன்பிறந்த சிறுகாலரும்பத் தீயரும்புந்தே மாநிழற்கண்டுஞ்சுமிளஞ்செங்கட்கயவாய்ப் புனிற்றெருமை,இன்னம் பசும்புற்கறிக்கல்லா விளங்கன்றுள்ளி மடித்தலநின், றிழிபாலருவியுவட்டெறிய வெறிபுந்தினைத் தீம்புனற்பொய்கைப், பொன்னங்கமலப் பசுந்தோட்டுப்பொற்றூதாடிக் கற்றைநிலாப், பொழியுந்தரங்கம்பொறையுயிர்த்த பொன்போற் றெருடுசோலடிப் பொலன்கூட், டன்னம் பொலியுந் தமிழ்மதுரைக்கரசேதாலோதாலேலோ, அருள்சூற்கொண்டவங்கயற்கண்ணமுதேதாலோதாலேலோ..................(க)

வீக்குஞ்சிறுபைந் துகிற்றோலை விரியுங்கலாபமருங்கலைப்ப, விளையாட்டயருமணற்சிற்றில் வீட்டுக்குடிபுக் கோட்டியிருள், சீக்குஞ்சுடர்தூங்கழன்மணியின்செந்தீமடுத்தசூட்டடுப்பிற்,செழுந்தாட்பவளத்துவரடுக்கித்தெள்ளிக்குநறுந்தண்டேறலுலை, வாக்குங்குடக்கூன் குழிசியிலம்மதுவார்த்தரித்தநித்திலத்தின், வல்சிபுகட்டிவடித்தெடுத்து வயன்மாமகளிற் குழாஞ்சிறுசோ, றூக்கும்பெருந்தண்டலை மதுரைக்கரசேதாலோதாலேலோ, அருள்சூற்கொண்ட வங்கயற்கண்ணமுதே தாலோதாலேலோ......................................(உ)

ஓம்படலைமுகிற்படலமூவர்நீத்துவரிமேய்ந்தகரு, வூறுங்கமஞ்சூல்வயிறுடையவுகைத்துக் கடவுட்கற்பகப்பூங், காடுந்தரங்கக்கங்கை நெடுங்கழியுநீந்தியமுதிறைக்குங், கலைவெண்மதியின் முயறடவிக்கதிர்மீன்கற்றைத்தினைத்துதறி, மூரிங்ககனவெளிக்கூட முகடுதிறந்துபறங்கோத்தமுந்நீருழக்கிச்சினவாளைமூரிச்சுறவினொடும்விளை, யாடும்பழனத்தமிழ்மதுரைக்கரசே தாலோதாலேலோ, அருள்சூற்கொண்ட வங்கயற்கண்ணமுதே தாலோதாலேலோ.......................(ங)

ஊர றங்கரடக்கடத்தழுகர்தூற்றுமதமாமடவியர்நில், றுதறுங்குமற்பூந்துகளடங்கவோடவிடுத்தகுங்குமச்செஞ், சேறுவழுக்கியோட்டறுக்குந்திருமாமறுகிலரசர் பெருந்திண்டே ரொதுங்கக்கொடுஞ்சி நெடுஞ்சிறுதேருருட்டுஞ்செ[illegible]ணமழ், வேறுபொருவேலிளைஞர்கடவிழுளிகடைவாய்குதட்டவழிந், திழியுப்விலழிகுமிழியெறித்திசைத்துத்

திரைத்துறைநாத்தொருபே, ராறுமடுக்குந்தமிழ் மதுரைக்கரசே தா
லோதாலேலோ, அருள்சூற்கொண்ட வங்கயற்கண்ணமுதே தாலோ
தாலேலோ...........................................(௪)

வார்க்குன்றிரண்டுசுமந்தொசியுமலர்க்கொம்பனையார்குழற்றுஞ்
சு, மழலைச்சுரும்பர் புகுந்துழக்க மலர்த்தாதுகுத்து வானதியைத்,
தூர்க்கும்பொதும்பின்முயற்கலைமேற்றுள்ளியுகளுமுசுக்கலையின், று
ழனிக்கொதுங்கிக் கழனியினெற்சூட்டுப் படப்பையைமேய்ந்துகதிர்ப்,
போர்க்குன்றேறுங் கருமுகிலைவெள்வாய்மள்ளர் பிணையலிடும், பொ
ருகோட்டெருமைப் போத்தினொடும் பூட்டியடிக்க விடிக்குரல்விட்,
டார்க்கும்பழனத்தமிழ்மதுரைக்கரசேதாலோதாலேலோ, அருள்சூ
ற் கொண்டவங்கயற்கண்ணமுதே தாலோதாலேலோ..........(௫)

காரிற்பொழிமழை நீரிற்சுழியெரி கழியிற்சிறகுழியிற், கனையிற்
கனைபொரு திரையிற்றலைவிரி கண்டலின் வண்டலினெற்,போரிற்கள
நிறை சேரிற்குளநிறை புனலிற்பொருகயலிற், பொழிலிற்சுருள்புரி
குழலிற்கணிகையர் குழையிற்பொருகயிற்போய்த், தேரிற்குமரர்க
ள் மார்பிற்பொலிகரு திருவிற்பொரிவில்வரிச், சிலையிற்றிரள்புய மலை
யிற்புலவிதிருத்திட ஆழ்த்தமுடித், தாரிற்பொருதிடு மதுரைத்துறை
மகள் தாலோ தாலேலோ, சங்கம்வளர்ந்திட நின்றபொலன்கொடி
தாலோ தாலேலோ..........................................(௬)

சேனைத்தலைவர்க டிசையிற்றலைவர்கள் செருவிற் றலைவர்களாற்
சிலையிற்றடமுடி தேரிற்கொடியொடு சிர்தச்சிந்தியிடுஞ், சோனைக்க
னைமழை சொரியப்பெருகிய குருதிக் கடலிடையே, தொந்தமிடும்
பல் கவந்தநிவந்தொரு சுழியிற்பவுரிகொள, ஆனைத்திரளொடு குதிரை
த்திரளையு மப்பெயர்மீனைமுகந், தம்மனையாடுக டற்றிரைபோலவடற்
றிரை மோதவெழுந், தானைக்கடலொடு பொலியுந்திருமகள் தாலோ
தாலேலோ, சங்கம்வளர்ந்திட நின்றபொலன்கொடி தாலோ தாலே
லோ.......................................................(௭)

அமரர்க்கதிபதி வெளிறக்களிறெ[illegible] பிளிறக்குளிறியிடா, வண்ட
மிசைப்பொளி கொண்ட லுதைத்திடு மமரிற்றமரினொடும், சமரிற்

கவிழ்தரு திசையிற்றலைவர்கண் மலையிற்சிறகரியுங், கடவுட்படையொடு பிறகிட்டுடைவது கண்டுமுகங்குளிராப், பமரத்தருமலர் மிலைப்படுமுடி தொலையக்கொடுமுடிதாழ், பைம்பொற்றடவரை திரியக்கடல்வயி றெரியப்படைதிரியாச், சமரிற்பொருதிரு மகனைத்தருமயில் தாலோ தாலேலோ, சங்கம்வளர்ந்திட நின்றபொலன்கொடி தாலோ தாலேலோ......................................................(௮)

முதுசொற்புலவர் தெளித்தபசுந்தமிழ் நூல்பாழ்போகாமே, முளரிக்கடவுள் படைத்தவசுந்தரை கீழ்மே லாகாமே, அதிரப்பொருது கலிப்பகை ஞன்றமிழ் நீர்நாடாளாமே, அகிலத்துயிர்க ளியர்த்துமறங்கடை நீணீர்தோயாமே, சிதைவுற்றரகிய னற்றருமங்குடி போய்மாய் வாகாமே, செழியர்க்கபயரு மொப்பெனநின்றுண ராதாரோதாமே, மதுரைப்பதிதழை யத்தழையுங்கொடி தாலே தாலேலோ, மலயத்துவசன் வளர்த்தபசுங்கிளி தாலோ தாலேலோ......... (௯)

தகரக்கரிய குழற்சிறுபெண்பிளை நீயோதுயோன்வாழ், கயிலைத்தெயிலை வளப்பவளென்றெதிர் சீறுவிரோதா, நிகரிட்டமர்செய் கணத்தவர்நந்தி பிரானேடேயோடா, நிலைகெட்டுலையவுடற்றவுடைந்தனதொ ரானே ராகாமே, சிகரப்பொதிய மிசைத்தவழுஞ்சிறு தேர்மேலேபோயோர், சிவனைப்பொருத சமர்த்தனுகந்தருள் செல்போன்மாயாமே, மகரத்துவச முயர்த்தபொலன்கொடி தாலோ தாலேலோ, மலயத்துவசன் வளர்த்தபசுங்கிளி தாலோ தாலேலோ..... (௰)

தாலப்பருவம் - முற்றிற்று.

## சப்பாணிப் பருவம்.

---

நாளவட்டத்தவிம னளினத் தொடுந்துத்தி நாகணையும் விட்டொரொட்டு, நாட்டத் தனுப்பரம விட்டத் தனுந்துஞ்சு நள்ளிருளி னுப்பணண்ட, கோளவட்டம்பழைய நேமிவட்டத்தினொடு குட்புற்றுவெற்பெட்டுமேழ், குட்டத்தி னிர்கவிழ முதண்டவேதண்ட கோதண்ட

விமாடிசக்கர, வாளவட்டஞ்சுழல் மட்டித்துநட்டமிடு மதுமத்தர் சுத்தரித்த, வட்டத்தினுக்கிசைய வொற்றிக்கனத்ததன வட்டத்தை யொத்திட்டதோர், தாளவட்டங்கொட்டு கைப்பாணியொப்பவொரு சப்பாணி கொட்டியருளே, தமிழொடுபிறந்துபழ மதுரையில் வளர்ந்த கொடி சப்பாணி கொட்டியருளே..............................(௧)

பொய்வந்தநுண்ணிடை நுடங்கக்கொடிஞ்சிப் பொலந்தேரொடமரகத்துப், பொன்மேருவில்லினை யெதிர்ப்பட்ட ஞான்றம்மை பொம்மன்முலை மூன்றிலொன்று, கைவந்தகொழுநரொடு முள்ளப் புணர்ச்சிக் கருத்தானகத்தொடுங்கக், கவிழ்ந்தலைவணக்கொடு முலைக்கண்ணைவைத் திடுமொரு கடைக்கணோக் கமுதமூற்ற, மெய்வந்த நாணினொடு நுதல்வந்தெழுங்குறு வெயர்ப்பினொ டுயிர்ப்புவீங்கும், விம்மிதமுமாய்நின்ற வுயிரோவ மெனவூன்று விற்கடை விரற்கடைதழீஇத், தைவந்தநாணினொடு தவழ்தந்தசெங்கைகொடு சப்பாணிகொட்டியருளே, தமிழொடுபிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டியருளே.................................... (௨)

பூமரு வெடிப்பமுதை விண்டதண் டலையின்ற புன்னைநறுந் தளிர்கள்கொய்தும், நெய்தற் சிறுக்களொடு வண்டற்கலம்பெய்து புழுதிவிளை யாட்டயர்ந்தும், காமரு மயிற்குஞ்சி மடவனப்பார்ப்பினொடு புறவுபிறவும் வளர்த்தும், காந்தள்செங்கமலத் தகழுநீர் மணந்தெணக் கண்பொத்தி விளையாடியும், தேமருபசுங்கிள்ளை வைத்துமுத்தாடியுந் திரள்பொற் கழங்காடியும், செவ்வந்தையா னல்லியு மியற்கைச் சிவப்புறு சேயிதழ் விரிந்ததெய்வத், தாமரை பழுத்தகைத் தளிரொளி தளும்பவொரு சப்பாணி கொட்டியருளே, தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டியருளே.. .. (௩)

விண்ணளிக்குஞ்சுடர் விமானமும்பரநாத வெளியிற் றவாதசாந்தவிடங்கடம்புபொதி காடுந்தடம்பணை விரிந்ததமிழ் நாடுநெற்றிக்,

கண்ணளிக்குஞ்சுந் தரக்கடவுள் பொலியுமறு காற்பீட்டமும் மெய்ப்பி
ரான், காமர்பரியங்கக் கவின்றங்குப்பள்ளியங்கட்டிலுந்தொட்டிலாகப்,
பண்ணளிக்குங்குதலை பழுதொழுகுகுமுதப் பசுந்தேற லூறலாடும்,
பைங்குழவிபெருவிரல் சுவைத்துநீபருகிடப் பைந்தேற லூறுவண்
கைத், தண்ணளிக்கமலஞ் சிவப்பூரவம்மையொரு சப்பாணிகொட்டி
யருளே, தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பா
ணிகொட்டியருளே.......................................(௪)

சேலாட்டுவாட்கட் கருங்கடற் கடைமடை திறந்தமுதமூற்றுகரு
ணைத் தெண்டிரைகொழித்தெறிய வெண்டிரை நெருப்பூட்டுதெய்வக்
குழந்தையைச்செங், கோலாட்டுநில்சிறுகணைக்காற்கிடத்திக்குளிப்பா
ட்டியுச்சிமுச்சிக்,குஞ்சிக்குநெய்போற்றிவெண்காப்புமிட்டுவளர்கொ
ங்கையிற்சங்குவாக்கும், பாலாட்டிவாயிதழ்நெரித்தூட்டியுடலிற்பசு
ஞ்சுண்ணமுந்திமிர்ந்து, பைம்பொற்குறங்கினிற் கண்வளர்த்திச் சிறி
யபலுருவமணித்தொட்டிலேற்றித், தாலாட்டியாட்டுகைத்தாமரைமுகி
ழ்த்தம்மை சப்பாணிகொட்டியருளே, தமிழொடுபிறந்துபழ மது
ரையில் வளர்ந்தகொடி சப்பாணிகொட்டியருளே..............(௫)

வானத்துருமொடுடுத்திரள்சிந்தமலைந்த பறந்தலையின், மன்ன
வர்பண்ணவர் வாளின்மடிந்தவர் மற்றவர் பொற்றொடியார், பானற்
கணையுமுலைக்குவடும்பொரு படையிற்படவிமையோ, பைங்குடர்மூ
ளையொடும்புதிதுண்டுபசுந்தடிசுவைகாணுச், செனப்பந்தரி னலகை
த்திரள்பலகுரவைபிணைத்தாடத், திசையிற்றலைவர்கள் பெருநாணெய்
தச் சிறுநாணொலிசெய்யாக், கூனற்சிலையினெடுங்கணை தொட்டவள்
கொட்டுகசப்பாணி, குடைநிழலிற்புவிமகளை வளர்த்தவள் கொட்டுக
சப்பாணி.................................................(௬)

சமரிற் பிறகிடு முதியருமபயமு மெதிரிட்டமராடத், தண்டதரன்
செல்கரும்பகடிந்திரல்வெண்[illegible]டோடுடையாத்,திமிரக்கடல்புகவரு
ணன்விடுஞ்சுற வருணன்விடுங்கடவுட், டேரினுகண்டெழ வார்வில்

வழங்கு கொடுங்கோல்செங்கோலோ, இமையத்தொடும்வளர் குல் வெற்பெட்டையு மெல்லைக்கல்லினிறீஇ, எண்டிசையுந்தனி கொண்டு புரந்து வடாதுகடற்றுறைதென், குமரித்துறையென வாழுமடப்பிடி கொட்டுகசப்பாணி, குடைநிழலிற்புவி மகளைவளர்த்தவள் கொட்டுக சப்பாணி........................................................(எ)

ஒழுகியகருணைபுவட்டெழவைத்தவருட்பார்வைக், குளநெகிழடி யர் பவக்கடல்வற்ற வலைத்தோடிக்குழையொடுபொருது கொலைக்க ணையைப்பிணையைச்சிறிக், குமிழொடுபழகிமதர்த்தகயற்கண் மடப் பாவாய் தழைகெழுபொழிலின் முசுக்கலைமைப்புயலிற்பாயத், தவழி ளமதிகலை நெக்குருபுத்தமுதத்தோடே, மழைபொழியிமய மயிற் பெடை கொட்டுகசப்பாணி, மதுரையில்வளரு மடப்பிடிகொட்டுக சப்பாணி........................................................(அ)

சென்றிடுவாளிகள்கூளிகள்காளிகள்ஞாளியிலாளியெனச், செருமு லைசெம்மலைமுதலியர்சிந்தச்சிந்திட நந்திபிரான், நின்றிலனோடவுமு ன்னழகும்மவன்பின்னழகுங்காணு, நிலவுவிரித்திடு குறுநகைகொண் டுநெடுங்கயிலைக்கிரியின், முன்றிலினுடன் மறந்தமராடியொர்மூரி ச்சிலைகுனியா, மூரிபுருவச்சிலைகடைகுனியச்சில முளரிக்கணைதொட் டுக், குன்றவிலாளியை வென்றதடாதகை கொட்டுகசப்பாணி, குடை நிழலிற்புவிமகளைவளர்த்தவள் கொட்டுக சப்பாணி.............(௯)

செழுமறைத்தெளியவடித்ததமிழ்ப்பதிசத்தோடே, திருவருளமுது குழைத்துவிடுத்தமுலைப்பாலாற், கழுமலமதலைவயிற்றைநிரப்பிமயிற் சேயைக், களிறுடும்வளரவளர்த்தவருட்செவிலித்தாயே, குழலிசை புழுகிமுழுப்பிரசத்திரசத்தோடே, குதிகொளுநறியகனிச்சுவைநெ க்கபெருக்கேபோல், மழலையினமுதருசொற்கிளிகொட்டுகசப்பாணி, மதுரையில்வளரு மடப்பிடிகொட்டுகசப்பாணி...................(௰)

சப்பாணிப்பருவம் - முற்றிற்று.

## முத்தப்பருவம்.

காலத்தொடுகற்பனைகடந்த கருவூலத்துப் பழம்பாடற், கலைமாச்
செல்வர்தேடிவைத்த கடவுண்மணியே யுயிராலவாலத்துணர்வினீர்
பாய்ச்சி வளர்ப்பார்க்கொளிபூத் தருள்பழுத்த, மலர்க்கற்பகமேயெ
மூதாச்சொன் மழலைத்ததும்பு பசுங்குதலைச், சோலைக்கிளியே யுயிர்த்
துணையாந் தோன்றுத்துணைக்கோர் துணையாகித், துவாதசாந்தப்பெ
ருவெளியிற் றுரியங்கடந்த பரநாத, மூலத்தலத்து முளைத்தமுழுமு
தலேமுத்தந்தருகவே, முக்கட்சுடர்க்கு விருந்திடுமும் முலையாய்முத்
தந்தருகவே.......................................................... (க)

உருகியுருகி நெக்குநெக்கு ளுடைந்துகசிந்திட் டகம்பூறும், உ
ழுவலன்பிற்பழவடியா ருள்ளத்தடத்தி லூற்றெடுத்துப், பெருகுபர
மானந்தவெள்ளம் பெருக்கேசிறியேம் பெற்றபெரும், பேறேபூறு
நறாக்கூந்தற் பிடியேகொடிநுண் ணுசுப்பொசிய, வருகுங்குமக்குன்
றிரண்டேந்து மலர்ப்பூங்கொம்பே தீங்குழலின், மதுரங்கனிந்த பசு
ங்குதலை மழலையரும்பச் சேதாம்பன், முருகுவிரியுஞ் செங்கனிவாய்
முத்தந்தருகமுத்தமே, முக்கட்சுடர்க்குவிருந்திடுமும் முலையாய்முத்
தந்தருகவே.......................................................... (உ)

கொழுதிமதர்வண்டுழக்குகுழற் கோதைக்குடைந்தகொண்டலு
நின், குதலைக்கிளிமென் மொழிக்குடைந்த குறுங்கட்கரும்புங் கூன்
பிறைக்கோ, டுழுதபொலன்சீ றடிக்குடைந்த செந்தாமரையும் பசுங்
கழுத்துக், குடைந்தகமஞ்சூட் சங்குமொழு கொளியகமுகு மழகு
தொய்யில், எழுதுதடந்தோட் குடைந்ததடம் பணையும்பணைமென்
முலைக்குடைந்த, இணைமாமருப்புந் தருமுத்துன் றிருமுத்தொவ்வா
விகபரங்கள், முழுதுந்தருவாய் நின்கனிவாய் முத்தந்தருகமுத்தமே,
முக்கட்சுடர்க்கு விருந்திடுமும் முலையாய்முத்தந்தருகவே..... (௩)

மத்தமதமாக்கவுட் டொருநான்மருப்புப்பொருப்புமிசைப்பொ
லிந்த, வானத்தரசுகோயில்வளர் சிந்தாமணியும் வடபுலத்தார், நத்தம்
வளர வளைகையர்கோ னகரில்வளரும் வான்மணியும், நளினட்பொகு
ட்டில்வீற்றிருக்கு நங்கைமனைக்கோர் விளக்கமெனப், பைத்தசுடி
கைப் படப்பாயற் பதுமநாபன் மார்பில்வளர், பரிதிமணியுமெமக்
கம்மைபணிலவாழிவேயீன்ற, முத்தமுகந்தநின்கனிவாய் முத்தந்தரு
கமுத்தமே, முக்கட்சுடர்க்குவிருந்திடுமும் முலையாய்முத்தந்தருகவே.

கோடுங்குவடும் பொருதரங்கக் குமரித்துறையிற் படுமுத்தும், கொற்கைத்துறையிற் றுறைவாணர் குளிக்குஞ்சலாபக்கு வான்முத்தும், ஆடும்பெருந்தண் டுறைப்பொருநை யாற்றிற்படுதெண்ணிலாமுத்தும், அந்தண்பொதியத் தடஞ்சார லருவிசொரியுங் குளிர்முத்தும், வாடுங்கொடிநுண் ணுசுப்பொசிய மடவமகளிருடனாடும், வண்டற் றுறைக்குவைத் தநெய்த்து மணந்தாழ்நறுமென் புகைப்படலம், மூடுங்குழலாய் நின்கனிவாய் முத்தந்தருகமுத்தமே, முக்கட்சுடர்க்குவி ருந்திடும் மூலையாய்முத்தந்தருகவே...... ..................... (ரு)

பைவைத்த துத்திப் பருஉச்சுடிகைமூன்றிற் பசுங்கொடியுடுக்கை கிழிபப், பாயிருட்படலங் கிழித்தெழுசுடர்ப்பரிதி பரிதிக்கொடிஞ்சி மான்றேற், மொய்வைத்தகொய்யுளை வயப்புரவிவாய்ச்செல்ல முட் கோல்பிடித்து நடுவான், முற்றத்தையிருள்பட விழுங்குந்துகிற்கொ டி முனைக்கணை வடிம்புனக்கா, மைவைத்தசெஞ்சிலையு மம்புலியுமோ டநெடுவான்மீன் மணந்துகந்த, வடவளாமுகந்தநின் வயக்கொடி யெனப்பொலிபு மஞ்சிவர்வளாகதொச்சித், தெய்வத்தமிழ்க்கூட ற ழையத்தழைத்தவ டிருப்பவள முத்தமருளே, செல்வைத்தவெண்கொ டியை வலம்வைத்தபெண்கொடி திருப்பவள முத்தமருளே... (௬)

பின்னற்றிறைக்கடன் மதுக்குடமறத்தேக்கு' பெய்முகிற் காருட லம்வெண், பிறைமதிக்கூன்குயக் கைக்கடைஞரொடுபுடை பெயர்த் திடை நடங்கவொல்கு, மின்னற்றடித்துக் கரும்பொற்றொடிக்கடை சி மெல்லியர்வெரீஇப்பெயரவான், மீன்கணம்வெறுக்கொள்ளவெடி வரால்குதிகொள்ளும் விட்புலம்விளைபுலமெனக், கன்னற்பெருங்காடு கற்பகக்காட்டுவளர் கடவுண்மா கவளங்கொளக், காமதேனுவுநின்று கடைவாய்குதட்டக் கதிர்க்குலை முதிர்ந்துவிளையும், செந்நெற்பட ப்பைமது ரைப்பதிபுரப்பவ டிருப்பவள முத்தமருளே, செல்வைத்த வொண்கொடியை வலம்வைத்தபெண்கொடி திருப்பவள முத்தமரு ளே.........................................................(எ)

சங்கோலிடுங்கடற் றானைக்குவெந்நிடு தராபதிகன் முன்றிறூர்த்த, தமனியக்குப்பைபுந் திசைமுதல்வர்தடமுடித் தாமமுத்தலைமயங்கக், கொங்கோலிடுங்கைக் கொடுங்கோலொடுந்திரி குறும்பின் கொடிச்சுற வுதின், கொற்றப்பதாகைக் குழாத்தினொடுமிரசதக் குன்றினுஞ்சென் றுலாவப், பொங்கோலவேலைப் புறத்தினொட்டத்தினிமிர் போராழி

பரிதியிரதப், பொங்காழிமற்றப் பொருப்பாழியிற்றிரி புலம்பப்பல
ம்புசெய்யச், செங்கோறிருத்திய குடிச்செழியர்கோமக டிருப்பவள
முத்தமருளே, சேல்வைத்த வொண்கொடியை வலம்வைத்தபெண்
கொடி திருப்பவள முத்தமருளே.................................(௮)

பருவனாமுதுபல வடியினிதெடுத்தெநெக்க ருடக்கனியிற், படுந
றைபடுநிறை கடமுடைபம்வக டுட்பவுவட்டெழவும், விரிதலைமுது
லொடு விளைபுலமுலைப வுழக்கியமுட்சுறவின், விசையினின் வழிநறை
யிடறுடிகமுகின் விழுக்குலைநெக்குகவும், களைபெறிபுணரியி னிரு
மடிபெருகு தடத்துமடுத்தகடக், ளிறுடுமிளிறிட விகலியமுகிலினி
ரட்டியிரட்டியமும், முரசதிர்கடிநகர் மதுரையில்வளர்கிளி முத்தம
ளித்தருளே, முழுதுலகுடையதொர் கவுரியர்குலமணி முத்தமளித்
தருளே.....................................................(௯)

புதையிருள்கிழிதர வெழுதருபரிதி வளைத்தகடர்புவியிற், பொது
வறவடிமைசெய் திடுவழிபடியர் பொருட்டலர் வட்டணையிற், றதை
மலர் தபொதுளியகளிய ளிகுமிரு குழற்றிரு வெத்தவளச், சதத்ள
முளரியின் வனிதையையுதவு சடைக்கண் மடப்பிடியே, பதுமமோ
டொழுகொளி வளையுதி னளினமு கத்துமிடற்றுமிறப், பனிமதியொ
டுசுவை யமுதமுநுதலொடு சொற்குதலைக்கணிநீஇ, முதுதமி முதநிபி
ல் வருமொரு திருமகண் முத்தமளித்தருளே, முழுதுலகுடைத்தொ
ர்கவுரியர்குலமணி முத்தமளித்தருளே...........................(௰)

முத்தப்பருவம் - முற்றிற்று.

## வருகைப்பருவம்.

அஞ்சிலம்போலிடவ ரிக்குரற்கிண்கிணி யார்த்துசெஞ் சீறடிபெ
யர்த், தடியிடுந்தொறுநின் னலத்தகச்சுவடுபட் டப்புவி யரம்பையர்
கடம், மஞ்சுதுஞ்சளகத் திளம்பிறைமுமெந்நுதமுடி வளரிளம்பிறை
யுநாற, மணிநூபிரத்தவிழு மென்குரற்கோவசையு மடநடைக்கோ
தொடர்ந்துல், செஞ்சிலம் புடிபற்று தெய்வக்குழாத்திறெடு சிறை
யோதிமம்பின்செலச், சிற்றிடைக்கொல்கிமணி மேகலையிரங்கத்திரு
கோயிலெனவெனெஞ்சக், கஞ்சாமுஞ்செஞ் சொற்றமிழ்க்கூடலுங்
கொண்ட காமர்பூங் கொடிவருகவே, கற்பகாடவியிற்கடப்பாடவிப்
பொலிபேற்கனு பகிவருகவே.......................................(௧)

குண்டுபடுபேரகழிவயிறுளைந்தீன்றபைங் கோதையும்மதுரமொழுகுங், கொழிதமிழ்ப்பனுவற்றுறைப்படியுமடநடைக்கூந்தலம்பிடியுமறுகால், வண்டுபடு முண்டக மனைக்குடிபுகச்சிவ மணங்கமழவிண்டதொண்டர், மானதத்தடமலர்ப்பொற்கோயில் குடிகொண்டமாணிக்கவல்லிவில்லே, டுண்டுபடுமதிநுதற்றேருகையொடு மளவில்பலதொல்லுருவெடுத்தமர்செயுந், தொடுசிலையெனக்ககனமுகடுமுட்டிப் பூத்துணர்த்தலைவணங்கிநிற்குங், கண்டுபடுகன்னல்பைங் காடுபடுகூடற் கலாபமாமயில்வருகவே, கற்பகாடவியிற் கடம்பாடவிப்பொலி கயற்கணாயகிவருகவே.............................................(௨)

முயல்பாய்மதிக்குழவி தவழ்சூலடிப்பலவின் முட்பொதிகுடக்கனியொடு, முடவுத்தடந்தாழைமுப்புடைக்கனிசிந்தமோதிநீருண்டிருண்ட, புயல்பாய்படப்பைத் தடம்பொழில்களன்றியேழ் பொழிலையுமொருங்கலைத்துப், புறமூடுமண்டச்சுவர்த்தலமிடித்தப்புறக்கடன் மடுத்துழக்கிச், செயல்பாய்கடற்றானைசெங்களங்கொள்ளவம்மை திக்குவிசயங்கொண்டநாள், தெய்வக்கயற்கொடி கடிசைதிசையெடுத்தெனத் திக்கெட்டுமுட்டவெடிபோய்க், கயல்பாய்குரம்பணை பெரும்பணைத் தமிழ்மதுரைகாவலன்மகள்வருகவே, கற்பகாடவியிற் கடம்பாடவிப் பொலி சயற்கணாயகிவருகவே.....................................(௩)

வடம்பட்டநின்றுணைக் கொங்கைக்குடங்கொட்டு மதுரவமுதுண்டுகடைவாய், வழியும்வெள்ளருவியென நிலவுபொழிகிம்புரிமருப்பிற் பொருப்பிடித்துத், தடம்பட்டபொற்றாது சிந்தூரங்கும்பத்தலத்தணிவதொப்பவப்பிச், சலராசியேழுந்தடக்கையின்முகந்துமின்றூனநீரானிரப்பி, முடம்பட்டமதியங்குசப்படையெனக்ககனமுகடுகைதடவியுடுமீன், முத்தம்பதித்திட்டமுகபடாமெனவெழுமுகிற்படாநெற்றிசுற்றுங், கடம்பட்டசிறுகட்பெருங்கொலையமழவிளங்களிறீன்றபிடி வருகவே, கற்பகாடவியிற்கடம்பாடவிப்பொலிகயற்கணாயகிவருகவே

தேனொழுகுகஞ்சப் பொலன்சீறடிக்கூட்டு செம்பஞ்சியின் குழம்பால், தெள்ளுமுநிறைக்கும்பசுங்குழவிவெண்டிங்கள் செக்கர்மதியாக்கலாம்பொரும், வானொழுகுதுங்கத்தரங்கப்பெருங்கங்கைவாணித்தியாச்சிவபிரான், மகுடகோடீரத்தடிச்சுவடழுத்தியிடுமரகதக்கொப்புகதிர்கால், மீனொழுகுமாயிருவிசும்பிற்செலுங்கடவுள்வேழத்தின்மத்தகத்தும், வீற்றிருக்குஞ்சேயிழைக்கும்பசுங்கமுகுவெண்கவரி வீசு

ம்வாசக், கானெழுகுதடமலர்க்கடிபொழிற்கூடல்வளர்கவுரியன் மகள்வருகவே, கற்பகாடவியிற் கடம்பாடவிப்பொலிகயற்கணாயகிவரு()

வடக்குங்குமக்குன் றிரண்டேந்தும்வண்டன்மகளிர்சிறுமுற்றில், வாரிக்குவித்தபணிக்குப்பைவானுறடைப்பவழிபிழைத்து, நடக்குங்கதிர்பொற்பரிசிலாநகுவெண்பிறைகைத்தோணியதா,நாண்மீன்பரப்பச்சிறுமிதப்பாநாப்பண்மிதப்பு நாற்கோட்டுக்,கடக்குஞ்சரத்தின்மதநதியுங்கங்காநதியு மெதிர்கொள்ளக், ககனவெளியுங்கற்பகப்பூங்காடுங்கடந்துகடல்சுருங்க,மடுக்குந்திரைத்தண்டுறைவையைவளநாட்டரசே வருகவே, மலயத்துவசன்பெற்றபெருவாழ்வேவருகவருகவே.. (௬)

சுண்ணந்திமிர்ந்துதேனருவி துளைந்தாடறுகாற்றும்பிபசுந்,தோட்டுக்கதவந்திறப்பமலர்த்தோகைகுடிபுக்கோகைசெயுந், தண்ணங்கமலக்கோயில் பலசமைத்தமருதத்தச்சன்முழு, தாற்றுக்கமுகு நாற்றியிடுந்தடங்காவணப்பந்தரில்வீக்கும், விண்ணம்பொதிந்த மேகபடாமிசைத்தூக்கியபன்மணிக்கொத்து, விரிந்தாலெனக்காணிமிர்ந்துதலைவிரிபுக்குலைநற்கற்றைபல, வண்ணம்பொலியும்பண்ணைவயன்மதுராக்கரசேவருகவே, மலயத்துவசன்பெற்றபெருவாழ்வேவருகவருகவே

தகரக்குழலினறையுநறைதருதீம்புகையுந் திசைக்களிற்றில், நடக்கைநாசிப்புழைமடுப்பத்தளருஞ்சிறுநண் மருங்குல்பெருஞ், சிகரக்களபப்பொம்மன்முலைத்தெய்வமுகளீர்புடையிரட்டுஞ், செங்கைக்கவரிமுகத்தெறியுஞ்சிறுகாற்கொசிந்துகுடிவாங்க, முகரக்களிவண்டடைகிடக்குமுளரிக்கொடிக்குக்கலைக்கொடிக்கு, முருந்துமுறுவல்விருந்திடுபுண் மூரனெடுவெண்ணிலவெறிப்ப, மகரக்கருங்கட்செங்கனிவாய்மடமான்கன்றுவருகவே, மலயத்துவசன்பெற்றபெரு வாழ்வேவருகவருகவே........................................................(௮)

தொடுக்குங்கடவுட்பழம்பாடற்றொடையின்பயனே நறைபழுத்த,துறைத்தீந்தமிழினொழுகுநறுஞ்சுவையேயகந்தைக்கிழங்கையகழ்ந்த,தெடுக்குந்தொழும்பருளக்கோயிற்கேற்றும்விளக்கேவளர்சிமைய.விமயப்பொருப்பில்விளையாடு மிளமென்பிடியே யெறிதரங்கம், உடுக்கும்புவனங்கடந்துநின்ற வொருவன்றிருவுள்ளத்திலழ, கொழுகவெழுதிப்பார்த்திருக்கு முயிரோவியமே மதுகரம்வாய், மடுக்குங்குழற்காடேந்துமிளவஞ்சிக்கொடியேவருகவே, மலயத்துவசன்பெற்றபெருவாழ்வே வருகவருகவே.............................. (௯)

பெருந்தேனிறைக்கு நறைக்கூந்தற்பிடியேவருக முழுஞானப் பெருக்கேவருகபிறைமௌலிப்பெம்மான்முக்கட்சுடர்க்கிடுநல், விருந்தேவருகமும்முதற்கும்வித்தேவருகவித்தின்றி, விளைக்கும்பரமானந்தத்தின்விளைவேவருகபழமறையின், குருந்தேவருகவருள்பழுத்தகொம்பேவருகதிருக்கடைக்கணின், கொழித்தகருணைப்பெருவெள்ளங்குடைவார்பிறவிப்பெரும்பிணிக்கோர், மருந்தேவருகபசுங்குதலைமழலைக்கிளியேவருகவே, மலயத்துவசன்பெற்றபெருவாழ்வே வருகவருகவே()

வருகைப்பருவம்-முற்றிற்று.

---

## அம்புலிப்பருவம்.

கண்டுபடுகுதலைப்பசுங்கிளியிவட்கொருகலாயேதமெய்ம்மைநின்னோக்,கலைமறைகள்முறையிடுவகண்டோவலாதொன்கலாநிதியெனத்தெரிந்தோ,வண்டுபடுந்தெரியற்றிருத்தாதைபார்மரபின்வழிமுதலெனக்குறித்தோ, வளர்சடைமுடிக்கெந்தைதன்னருங்கன்னியா வைத்ததுகடைப்பிடித்தோ, குண்டுபடுபாற்கடல்வருந்திருச்சேடியோடுகூடப்பிறந்ததோர்ந்தோ, கோமாட்டியிவணின்னைவம்மெனக்கொம்மெனக்கூவிடப்பெற்றுபுனக்,கண்டுபடுசிறிதன்றுதலாலிவளுடனம்புலீயாடவாவே, ஆணிப்பொன்வில்லிபுணர் மாணிக்கவல்லியுடனம்புலீயாட()

குலத்தோடுதெய்வக்குழாம்பிழிந் தாற்றிக்குடித்துச்சுவைத்து மிழ்ந்த, கோதென்றுமழல்விடங் கொப்புளிக்கின்றவிரு கோளினுச்சிட்டமென்றும், கலைத்தோடுமுடிக்களங்கம்பொதிந்திட்ட சயரோகியென்றுமொருநாள், கண்கொண்டுபார்க்கவுங் கடவதன்றெனவிசுகடற்புவியெடுத்திகழவிட்,புலத்தோடுமூடுமீன் கணத்தோடு மோடுநின்போல்வார்க்குமாபாதகம், போக்குமித்தலமலது புகலில்லைகாண்மிசைப் பொங்குபுனல்கற்பககா, டலைத்தோடுவையைத்துறைப்படிமடப்பிடியோடம்புலீயாடவாவே, ஆணிப்பொன்வில்லிபுணர் மாணிக்கவல்லியுடனம்புலீயாடவாவே.......(௨)

கீற்றுமதியெனநிலவு தோற்றுபருவத்திலொளி கிளர் நுதற்செவ்வி வவ்விக், கெண்டைத்தடங்கணொருவிட்டிறைஞ்சக் கிடந்ததுமுடைந்தமுதம்வீண், டீற்றுபுதுவெண் கலைபுடைத்து முழுமதியெனவுதித்த, வமையத்திமம்மை, யொண்முகத்தொழுகு திருவழகைக் கவர்ந்துகொண்டோடினது நிற்சமற்றை, மாற்றவிளையாடுங்கேள்வர்மௌலியி

றுறைந்தது மநந்துனையழைத்தபொழுதே,மற்றிவள் பெருங்கருணை
சொற்றிடக்கடவதோமண்முழுதும்விம்முபுயப்வைத், தாற்றுமுடிய
ரசுதவுமாசிளங்குமரியுட னம்புலீயாடவாவே, ஆணிப்பொன்வில்லி
புணர்மாணிக்கவல்லியுடனம்புலீயாடவாவே.....................(௩)

விண்டலம்பொலியப் பொலிந்திடுதியேனுனது வெம்பணிப் ப
கைவிழுங்கி, விக்கிடக்கக்கிடத் தொக்கிடர்ப்படுதிவெயில் விரியுஞ்சுட
ர்ப்பரிதியின், மண்டலப்புக்கனை யிருத்தியெனின்னுள்ளொளி மழுங்
கிட வழுங்கிடுதிபொன். வளர்சடைக் காட்டெந்தை வைத்திடப்பெறு
தியேன் மாசுணஞ்சுற்றவச்சம், கொண்டுகெண்டுஞ்சா திருப்பதுமருப்
பொங்கு சோதையிவள் சிரடிகணின், குடர்குழம்பிடவே குமைப்ப
தும்பெறுதியெங் கோமாட்டி பாலடைந்தால், அண்டபகிரண்டமு
மகண்டமும்பெறுதியா லம்புலீயாடவாவே, ஆணிப்பொன் வில்லி
புணர் மாணிக்கவல்லியுடமம்புலீயாடவாவே.....................(௪)

எண்ணில்பலபுவனப்பெருந்தட்டை யூடுருவியிவள்பெரும்புகழ்
நெடுநிலா,எங்கணுநிறைந்திடுவதங்கதனில்மெள்ளநீயெள்ளவுமொண்
டுகொண்டு, வெண்ணிலவுபொழிவது கிடைத்தனைமடுத்திவள் விழிக்க
டைகொழித்தகருணை, வெள்ளந்திளைத்தாடு பெற்றியாற்றண்ணளி வி
ளைப்பதும்பெற்றனைகொலாம், மண்ணிலொண்கலைபங் க[illegible]ழ்வளர்ப்ப
துனிடத்தம்மைவைத்திடுஞ் சத்தியேகாண், மற்றொருசுதர்தா நினக்
கெனவிலைக்கலைமதிக்கடவுணீயுமுணர்வாய், அண்ணலங்களியானை யர
சர்கோமகளுட னம்புலீயாடவாவே, ஆணிப்பொன்வில்லிபுணர் மா
ணிக்கவல்லியுட னம்புலீயாடவாவே.............................(௫)

முன்பும்பராகுசெப் பெரும்பாவமுங்கோபு ஷரிமாத் தொடர்
சாபமும்,மும்மைத்தமிழ்ச்செழியன் வெப்பொடுகொடுங்கூனுமோ
சித்தவித்தலத்தின்,றன்பெருந்தன்மைப யுணர்ந்திலைகொள் சிவராச
தானியாய்ச் சீவன்முத்தித், தலமுமாய்த்துவாதசாந் தத்தலமு மான
தித் தலமித்தலத்திடைதியேல், மன்பெருங்குரவர் பிழைத்தமாவடும
ற்றை மாமடிக ளிடுசாபமும், வளரிளம்பருவத்து நளாதிராயு முதிர்
கூனு மாற்றிடப்பெறுதிகண்டாய், அன்பரொன்புருகக் கசிந்திடுபசுந்
தே னுடம்புலீ யாடவாவே, ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க
வல்லியுட னம்புலீயாடவாவே.................................(௬)

கும்பஞ்சுமந்த மதவெள்ளநீர் கொட்டுங்கொடுங்களிறிடும் போர்வையான், குடிலகேடீரத்திருந் துகொண்டநலார்கொய்தளிர்க்கைவருடவுஞ், செம்பஞ்சுறுத்தபும்பதைபதைத்தா ரழற்சிகையெனக்கொப்புளிக்குஞ், சீறடிகள்கல் றிச் சிவந்திடச்செய்வதுந் திருவுளத் தடையாதுபொற், றம்பஞ்சுமைந்தீன்றமானிடவிலங்கின் றனிப்புதல்வனுக்குவட்டத், தண்குடைநிழற்றுநினைவம்மெனவழைத்தனடழைத்திடு கழைக்கரும்பொன், றம்மஞ்சுடல்கொண்டமகரக்கொடிக்கொடியொடம்புலீயாடவாவே, ஆணிப்பொன்வில்லி புணர்மாணிக்கவல்லியுடனம்புலீயாடவாவே..................................(எ)

துளிதூங்குதெள்ளமுத வெள்ளருவிபொழிபுநின் றொன்மரபுதழையவந்து, தோன்றிடுங்கவுரியர் குலக்கொழுந்தைக்கண்டு துணைவிழிபு மனமுநின்று, களிதூங்கவளவளாய் தாழாமலுண்ணமுது கலையொவமிழந்துவெறுமட், கலத்திடுபுதுக்கூழி னுக்கிரவுபூண்டொருகளங்கம்வைத் தாயிதுவலால், ஒளிதூங்குதெளிவிசும் பினினின்றொடொத்தவ னொருத்தன்கரத்தின்வாரி, உண்டொதிக்கியமிச்சி லள்ளிருளிள்ளியுணடோடுகின்றாயெல்செய்தாய், அளிதூங்குஞிமிறெழுந்தார்க்குங்குழற்றிருவொ டம்புலீயாடவாவே, ஆணிப்பொன்வில்லிபுணர் மாணிக்கவல்லியுட னம்புலீயாடவாவே..................(அ)

மழைக்கொந்தளக்கோதை வம்மினென்றளவினீவந்திலையெனக்கடுகலும், வான்முகச்செவ்விக்குடைந்தொதுங்கினவனெதிர்வரவொல்கியோபணிகள்கோ, ளிழைக்குங்கொல்பின்றொடர்ந்தெனவஞ்சியோதாழ்த்திருந்தனன்போலுமெனயா, மித்துணையுமொருவாறு தப்புவித்தோம்வெகுளினினியொரு பிழைப்பில்லைகாண், டழைக்குந் துகிர்கொடிமுகிற்கொடி நிரைத்துமேற்றலம் வளர்நகிற்கொடிகளைத்தாழ்குழலுநீவிறுதல்வெயர்வுந்துடைத்தம்மை சமயமிதுவென்றலு வலிட், டழைக்குந்தடம்புரிசையதுணைத்துணைப்பெணுட னம்புலீயாடவாவேஆணிப்பொன்வில்லிபுணர்மாணிக்கவல்லியுடனம்புலீயாடவா

ஏடகத்தெழுதாதவேதச்சிரத்தரசிருக்குமிவள்சீறடிகணின், னிதயத்தடத்தும்பொலிந்ததவர்திருவுளத்தெண்ணியன்றேகபடமா, நாடகத்தைந்தொழினடிக்கும்பிரான்றெய்வநதியொடுமுடித்தல்பெற்றாய்நங்கை, யிவடிருவுளமகிழ்ச்சிபெறிலிதுபோலொர்நற்றவப் பேறில்லைகா

ண், மாடகக்கடைதிருத்தின்னரம்பார்த்துகிர்வடிம்புதைவருமந்நலா
மகரயாழ்மழலைக்குமரவங்கணுண்டிகில்வழக்கக்கொழுங்கோரங்குதாங்,
காடகப்பொற்கிழியவிழ்க்கு மதுரைத்திருவொ டம்புலீயாடவாவே,
ஆணிப்பொன்வில்லிபுணர்மாணிக்கவல்லியுடனம்புலீயாடவாவே(௯)

அம்புலிப்பருவம் - முற்றிற்று.

---

## அம்மானைப்பருவம்.

களைக்குங்கடாமிருக வுட்குடமுடைந்தூற்று களிறுபெரு வயிறு
தூர்ப்பக், கவளந்திரட்டிக் கொடுப்பதெனவுஞ்சூழ்ந்தொர் கலைமதிக்
கலசவமுதுக், களைக்கும்பெருந்தேவர் புன்கண்டுடைத்திட வெடுத்த
முத கலசம்வெவ்வே, றீந்திடுவதெனவுமழு முத்திட்டிழைத்திட்டவெ
றிபந்த திரையென்னவும், விளைக்குந்தளிர்க்கைக் கொழுந்தா மரைத்
துஞ்சி மீதெழுந்தார்த்தபிள்ளை, வெள்ளோதிமத்திரளி தெனவுங்கரு
ம்பாறை மீமிசைச் செஞ்சாந்துவைத், தளைக்குந் திரைக்கைவெள் ள
ருவி வையைத்துறைவி யம்மானையாடியருளே, ஆகங்கலந்தொருவர்
பாகம்பகிர்ந்தபெண் ணம்மானை யாடியருளே.................(௧)

திங்கட்கொழுந்தைக் கொழுந்துபடு படர்சடைச் செருகுதிரு ம
ணவாளன்மேற், செழுமணப்பந்தரி லெடுத்தெறியுமமுதவெண் டிர
ளையிற் புரளுமறுகாற், பைங்கட்சுரும்பென விசும்பிற் படர்ந்தெழும்
பனிமதி மிசைந்தாவிடும், பருவமட மானெனவெ னம்மனைதினம்ம
னைப் படைவிழிக் கயல்பாய்ந்தெழ, வெங்கட்கடுங்கொலைய வேழக்கு
ழாமிதென மேகக்குழாத்தைமுட்டி, விளையாடுமழகளிறு கடைவாய்
குதட்டமுகை விண்டவம், பைந்துகோத்த, அங்கட்கரும்பேந்து மயி
டேகவல்லிதிரு வம்மானை யாடியருளே, ஆகங்கலந்தொருவர் பாகம்
பகிர்ந்தபெண் ணம்மானை யாடியருளே.........................(௨)

கள்ளூறுகஞ்சக் கரத்துறசேயொளி கலப்பச் சிவப்பூரியும், கரு
ணைப்பெருக்கூற வமுதூறுபார்வைக் கடைக்கட்கறுப்பூரியும், நள்ளு
றுமறுவு றகற்றுமுகமதியில்வெண் ணகையூறு நிலவூறியும், நற்றாள
வம்மனையொர் சிற்குணத்தினைமூன்று நற்குணங் கதுவல்காட்ட, உள்
ளூறுகளிதுளும் பக்குரவரிருவிரு முற்றிடு துவாதசாந்தத், தொரு
பெருவெளிக்கே விழித்துறங்குந்தொண்ட ருழுவலன் பெல்புருகநெ
க், கள்ளூறவுள்ளேக சிந்தூறுமைந்தேற லம்மானை யாடியருளே, ஆ
கங்கலந்தொருவர் பாகம்பகிர்ந்தபெண் ணம்மானையாடியருளே(௩)

குலைபட்டகாந்தட் டளிர்க்கையிற்செம்மணி குயிற்றவம் மனை
நித்திலங், கோத்தவம்மனைமுன் செலப்பின்செலுந்தன்மை கோகன
கமனையாட்டியாற், கலைபட்டவெண்சுடர்க் கடவுடோய்ந்தேகவது க
ண்டுகொண்டேடுபுழுங்குங், காய்கதிர்க்கடவுளும் பின்றொடர்வதேய்ப்
பக் கரங்கருவி தூங்கவோங்கு, மலைபட்டவாரமும் வயிரமும்பிறவு
மா மாமணித்திரளைவாரி, மறிதிரைக்கையா லெடுத்தெறிய நாற்கோட்
டு மதகளிறு பிளிறியோடும், அலைபட்டவையைத் துறைச்சிறையனப்
பேடை யம்மானை யாடியருளே, ஆகங்கலந்தொருவர் பாகம்பகிர்ந்
தபெண் ணம்மானையாடியருளே.. .............................. (௪)

தமரானநின்றனைச் சேடியரிலொருசிலர் தடக்கையி னெடுத்தாடு
தின், றாளவம்மனைபிடித் தெதிர்வீசிவீசியிட சாரிவலசாரிதிரியா, நிமி
ராமுனம்மனையோ ராயிரமெடுத்தெறிய நிரைநிரைய தாய்க்ககனமே
ல், நிற்கின்றதம்மைநீ பெற்றவகிலாண்டமு நிரைத்துவைத் ததுகடுப்
ப, இமிராவரிச்சுரும் பார்த்தெழப்பொழிலு மெழுந்தபைந் தாதுல
கெலாம், இருள்செயச்செய் துநின் சேனுபாகமெனு மேக்கமளகா
புரிக்கும், அமராவதிக்குஞ் செய் மதுராபுரித்தலைவி யம்மானை யாடி
யருளே, ஆகங்கலந்தொருவர் பாகம்பகிர்ந்தபெண் ணம்மானையாடி.

உயிராயிருக்கின்ற சேடியரின்மலர்மீ துதித்தவ ளெதிர்த்துநின்
னோ, டொட்டிவெட்டிப்பிடித் திட்டவம்மனைதேடி யோடியாடித் தி
ரியநீ, பெயராதிருந் துவிளை யாடுவதுகண் டெந்தைபிறைமுடி துளக்
கமுடியாற், பெருகுசுரகங்கைநுரை பொங்கலம்மானையப் பென்ன
கொடியு மாடன்மான, வெயராமனப்புழுங் கிடுமமரர்தச்சனும்விய
ப்பச் செயுந்தவளமா, மேடையுந்தண்டரள மாடமுந்தெண்ணிலா
வீசத்திசைக்களிறெல்லாம், அயிராவதத்தினை நிகர்க்குமது ராத்தலைவி
யம்மானை யாடியருளே, ஆகங்கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
ணம்மானையாடியருளே.................................... (௫)

முத்தம்முத்திய வம்மனைகைம்மலர் முளரிமணங்கமழ, மொய்
குழல்வண்டுநின் மைவிழிவண்டின் முயங்கிமயங்கியிடக், கொத்தும
ணித்திர ளிற்செயும்மனை குயிலின்மிழற்றியநின், குழலினிசைக்குறீ
கிப்பணிதூங்கு குறந் துளிசிந்தியிட, வித்துருமத்திலிழைத்தவுநின்கை
விரற்பவளத்தளிரின், விளைதருமொள்ளொளி திருடப்போவது மீள்

வதுமாய்த்திரிய, அத்தன்மனத்தெழு திப்வுயிரோவிய மாடுக வம்ம
னையே, அழகுதழைந்தகல் யாணசவுந்தரி யாடுகவம்மனையே... (எ)

விளரிமிழற்றளிகுமிறுகுழற் கொடிவீசியவம்மனைபோய், விண்
ணினிரைத்தெழுவது ககனத்திருமேனியதானவருக், கிளநிலவுமிழ்பரு
முத்தின்கோவையெடுத்தவர்திருமார்புக், கிடுவகடுப்பவுமப்பரிசேப
லமணியினியற்றியிடும், வளரொளிவிம்மியவம்மனைசெல்வது வானவி
லொத்திடவும், மன்னெக்குருகப்பரமானந்தமடுத்ததிருத்தொண்டர்க்
களிகனியத்திருவருள்கனியுங்கனியாடுகவம்மனையே, அழகுதழைந்தக
ல்யாணசவுந்தரியாடுக வம்மனையே ............................(அ)

கைம்மலரிற்பொலிகதிர்முத்தம்மனை நகைமுத்தொளிதோயக், க
கண்டவர்நிற்கப்பிறர்சிலர்செங்கைக்கமலச்சுடர்கதுவச், செம்மணியி
ற்செய்திழைத்தனவெனவுஞ்சிற்சிலர்கட்கடையில், செவ்விலையவ்வி
யுபின்கருமணியிற்செய்தனகொல்லெனவுந், தம்மனமொட்டவுரைப்
பனமுற்றைச்சமையத்தமைவுபெறார், தத்தமினின்றுபிதற்றவபொரு
வத்தனிமுதல்யாமென்பார்க், கம்மனையாயவர்தம்மனையானவளாடுக
வம்மனையே, அழகுதழைந்தகல்யாணசவுந்தரியாடுகவம்மனையே.(கூ)

ஒள்ளொளிமரகதமும்முழுநீலமுமொண்டரளத்திரளும், ஒழுகொ
ளிபொங்கவிழைத்திடுமம்மனையொருமென்றடைவிலெழாக், கள்ளவிழ்
கோதைவிசும்புறவீசுவகண்ணுதல்பாற்செலநின், கையில்வளர்த்தபசு
ங்கிளியும்வளர்காமர்கருங்குயிலும், பிள்ளைவெள்ளோதிமமும்முறைமு
றைபாற்பெருகியகாதலைமேற், பேசவிடுப்பகடுப்பவணைத்தொருபெ
டையோடரசவனம், அள்ளல்வயற்றுயில்மதுரைத்துரைமகளாடுகவ
ம்மனையே, அழகுதழைந்தகல்யாணசவுந்தரியாடுகவம்மனையே...(ய)

அம்மானைப்பருவம்-முற்றிற்று.

---

## நீராடற்பருவம்.

வளையாடுவன்கைப்பொலன் சங்கொடும்பொங்குமறிதிரைச சங்
கோலிட, மதரரிக்கடல்கயல்வரிக்கயலொடுப்புரள மகரந்தமுண்டுவ
ண்டின், கிளையாடுநின்றிருக்கேசபாசத்தினொடுகிளர்சைவலக்கொத்தெ
ழக், கிடையாதபுளவிருத்தெதிர்பொண்டுதத்தமிற்கேலிர்கடழீஇக்கொ
ண்டெனத், தளையாடுகறையடிச்சிறுகட்பெருக்கைத் தடக்களிறெடுத்
துமற்றத், தவளக்களிற்றினொடுமுட்டவிட்டெட்டுமதத்தியும்பந்தழ

த்து,விளையாடும்வையைத்தடந்துறைகுடைந்துபுதுவெள்ளநீராடியருளே, விடைக்கொடியவர்க்கொருகயற்கொடிகொடுத்தகொடிவெள்

நிரைபொங்கிடுஞ்செங்கைவெள்வளைகலிப்பநகைநிலவுவிரிபவளம்வெளிற,நீலக்கருங்குவளைசெங்குவளைபூப்பவறனெறிகுழற்கற்றைசரியத், திரைபொங்குதண்ணந்துறைக்குடைந்தாடுவகெழுந்தரங்கக்கங்கைநுங்,சிறுதிவலையாய்ப் பொங்குமானந்தமாக்கடற்றிளைத்தாடுகின்றதேய்ப்பக்,கரைபொங்குமதிதிரைக்கையாற்றடம்பணைக்கழனியிற்கன்னியர்முலைச்,களபக்குழம்பைக்கரைத்துவிட்டள்ளற்கருஞ்சேறுசெஞ்சேறதாய், விரைபொங்கிடத்துங்கவேகவதிபொங்கு புதுவெள்ளநீராடியருளே, விடைக்கொடியவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீராடியருளே.......................................(உ)

பண்ணுறுகிளிமொழிப்பாவைநின்றிருமேனிபாசொளிவிரிப்பவந்தண்,பவளக்கொடிக்காமர்பச்சிளங்கொடியதாய்ப்பருமுத்தமரகதமதாய்த், தண்ணுறுமல்லற் றுறைச்சிறைபனங்களி தழைக்குங்கலாமஞ்ஞையாய்ச்,சகலமுந்நின்றி நச்சொருபமென் றோவிடுஞ்சதுமறைப்பொருள்வெளியிடக், கண்ணுறுகுழலியர்குடக்கொங்கைபொங்குசெங்களபமுங்கத்தூரியும், கற்புரமுமொக்கக்கரைத்தோடிவாணியுங்காளிந்தியுங்கங்கையாம், விண்ணுறுமளவளாய்விளையாடுவையை புதுவெள்ளநீராடியருளே, விடைக்கொடியவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடிவெள்ளநீராடியருளே.......... ........................(௩)

தூங்குசிறையறகாலுறங்குகுழனின்றுணைத் தொழியர்கண்மேற்குங்குமம்,தோயும்பனித்துறைச்சிவிறிவீசக்குறுந்துளியெம்மருங்குமோடி, வாங்குமலைவில்லியார் விண்ணுருநனைந்தவர்வனைந்திடுதிகம்பரஞ்செவ், வண்ணமார்செய்வதச்செவ்வான வண்ணமொடு மஞ்சள்விளையாடலேய்ப்பத், தேங்குமலையருவிநெடுநீத்தத்துமாசுணத்திரள்புறஞ்சுற்றியீர்ப்பச்,சினவேழமொன்றொருசுழிச்சுழல்வமந்தரந்திரைக்கடன்மதித்தன்மானும், வீங்குபுனல்வையைத்தடந்துறைகுடைந்துபுதுவெள்ளநீராடியருளே, விடைக்கொடியவர்க்கொரு கயற்கொடிகொடுத்தகொடி வெள்ளநீராடியருளே.. .........................(௪)

துளிக்கும்பனித்திவலை சிதறக்குடைந்தாடு துறையிற்றுறைத்தமிழொடும், தொன்மறைதெளிக்குங்கலைக்கொடியெனுந்துணைத்தோழி மூழ்கிப்புனன்மடுத்,தொளிக்கும்பதத்து மற்றவளைவளைப்பேடை

யோடிப் பிடிப்பதம்மை, பொன்பரியுரத்தொனியு மடநடையும் வௌவின துணர்ந்துபின்றொடர்வதேய்ப்ப, நெளிக்குந்தரங்கத்தடங் கங்கையுடனெட்டிநித்திலப்பந்தாடவும், நிரைமணித்திரளின்கழங்காட வுந்தன்னெடுந்திரைக்கையெடுத்து, விளிக்கும்பெருந்தண்டுறைக்கடவு ள்வையையைநெடுவெள்ள நீராடியருளே, விடைக்கொடியவர்க்கொரு கயற்கொடி கொடுத்த கொடிவெள்ள நீராடியருளே..............(௫)

துங்கமுலைப்பொற்குடங்கொண்டுதூநீர்நீந்திவிளையாடுந், துணைச் சேடியர்கண்மேற்பசும்பொற்சுண்ண மெறியவறச்சேந்த, அங்கண்விசும்பினின்குழற்காட்டறுகாற்சுரும்பரொழுந்தார்ப்ப, ஐயன்றிருமேனியிலம்மையருட்கட்சுரும்பார்த்தெழன்மானச், செங்கணிளைஞர்களிக்காமத்தீமூண்டிடக்கண்டிளமகளிர், செழுமென்குழற்கூட்டகிற்புகையாற்றிரள்காய்க்கதலிபழுத்துநறை, பொங்குமதுரைப் பெருமாட்டிபுதுநீராடியருளுகவே, பொருனைத்துறைவன்பொற்பாவாய்புது நீராடி யருளுகவே.......................................................(௬)

இழியும்புனற்றண்டுறைமுன்றிவிதுவெம் பெருமான் மண்சுமந்த, இபமென்றலர்வெண் கமலப்பெண்ணிசைப்பக் கசிந்துள்ளுருகியிரு, விழியுஞ்சிவப்ப வானந்தவெள்ளம் பொழிந்துநிற்றனையால், மீண்டும்பெருக விடுத்தவற்கோர் வேலைபிடுதன் மிகையன்றே, பிழியு நறைக்கற் பகமலர்ந்த பிரசமலர்ப்பூந் துகண்மூழ்கும், பிறைக்கோட் டயிரா வதக்கூந்தற் பிடியோடாடத் தேனருவி, பொழியும்பொழிற் கூடலிற்பொலிவாய் புதுநீராடி யருளுகவே, பொருனைத்துறைவன் பொற்பாவாய் புதுநீராடி யருளுகவே............................(௭)

மறிக்குந்திரைத்தண் புனல்வையை வண்டலிடுமண் கூடைகட்டி, வாரிச்சுமந்தோர்க் கம்மைதுணை மணிப்பொற்குடத்திற் கரைத்தூற்றும், வெறிக்குங்குமச்சேறெக்கரிடும் விரைப்பூந்துறைமன் போலொருத்தி, வெண்பிட்டிடவு மடித்தொருவன் வேலைகொளவும் வேண்டுமெனக், குறிக்குமிடத்திற் றடந்துநீர் குடையப்பெறினக் கங்கைதிருக், கோடீரத்துக்குடியிருப்புங் கூடாபோலும் பொலன்குவட்டுப், பொறிக்குஞ்சரவக் கொடியுயர்த்தாய் புதுநீராடி யருளுகவே, பொருனைத்துறைவன் பொற்பாவாய் புதுநீராடி யருளுகவே. (௮)

சொற்கொடி போடுமலர்க்கொடி கொய்து கொடுத்த வினைத்தொடையும், சுந்தரிதீட்டிய சித்திரமும்மிரு துங்கக்கொங்கைகளின்,

விற்கொடிகோட்டியபதுங்குமருங்குடை வெள்ளக்கொள்ளைகொள, வெளியேகண்டிறின் வடிவழகையல் விழிக்குவிருந்துசெய, இற்கொடியோடு கயற்கொடிவிர லெடுத்தகருப்புவிலும், இந்திரதனுவும் வணங்கவணங்கு பிணைப்பருவக்கொடிசேர், பொற்கொடியிமய மடக்கொடிவையை புதுநீராடுகவே, பொருனைத்துறையொடு குமரித்துறையவள் புதுநீராடுகவே.......................................... (௯)

கொள்ளைவெள்ளருவி படிந்திடுமிமயக் கூந்தன் மடப்பிடிபோல், கொற்கைத்துறையிற் சிறைவிரியப்புனல் குடையு மனப்பெடைபோல், தெள்ளமுதக்கட னடுவிற்றோன்று செழுங்கமலக்குயில்போல் தெய்வக்கங்கைத் திரையூடெழுமொரு செம்பவளக்கொடிபோல், கள்ளவிழ்கோதையர் குழலிற்குழலிசை கற்றுப்பொற்றருவிற் களிநறவுண்ட மடப்பெடையோடு கலந்து முயங்கிவரிப், புள்ளுறைபூம்பொழில் மதுரைத்துறைமகள் புதுநீ ராடுகவே, பொருனைத்துறையொடு குமரித்துறையவள் புதுநீ ராடுகவே...................... (௰)

நீராடற்பருவம் - முற்றிற்று

---

## ஊசற்பருவம்.

ஒள்ளொளிய பவளக்கொழுங்கால் மிசைப்பொங்கு மொழுகொளிய வயிரவிட்டத், தாற்றுஞ்செழுந்தண் ணிலாக்கால் விழுந்தனைய வொண்டரள வடம்வீக்கிடும், அள்ளிடவழிந்துசெற் றொளிதுளும்புங்கிரண வருணரத்நப்பலகைபுக், காடுநிற்றோற்றமப் பரிதிமண்டலம்வள ரரும்பெருஞ் சுடரையேய்ப்பத், தெள்ளுசுவையமுதங் கனிந்தவானந்தத் திரைக்கடல் மடுத்தழக்குஞ், செல்வச்செருக்கர்கண் மனக்கமலநெக்கபூஞ் சேக்கையிற் பழையபாடற், புள்ளொளியெழக் குடிபுகுந்தகுந் தவல்லி பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூசலாடியருளே. (௧)

வித்தொளிய நிலவுபொழி வெண்ணித்திலம்பூண்டு வித்துருமபட மழகதிர்விடும், வெண்டரளவூசலின் மிசைப்பொலிவபுண்டரிக வீட்டிற் பொலிந்தமடமாச், சொற்பாவிபழம்பாடல் சொல்லுகின் றவளுதின் சொருபமென் பதுமிளநிலாத், தாற்றுமதிமண்டலத் தமுதமாயம்மைநீ தோன்றுகின் றதும்விரிப்ப, எற்பொலிய வொழுகுமுழு மாணிக்கவூசலுகைப் பேறிமழை முகிறவழ்வதவ், வெறிதடர்க் கடவுடிரு மயிற்பிடவைக்கமடமக விருந்துவிளை யாடலேய்க்கும், பொற்புரிசைமதுரா புரிப்பொலி திருப்பாவை பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச்சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூசலாடி.

உருகிய பசும்பொன் னகம்பவெயில்வீசுபொன் னூசலையுதைந்
த்தாடலும், ஒண்டொளிரடிச்சுவ டுற்பெறும்சோகுநற வொழுகும
லர் பூத்துதிர்வதுவல், திருமுனூருவங்காந் தெந்தையார்நீற்பது தெ
ரிந்திட நமக்கிதுவெனுச், செஞ்சிலைக் கள்வனொரு வன்றொடைமடக்
காது தெரிமணிகள் சொரிவதேய்ப்ப, கிரிமணி குயின்றபொற் செ
ய்குன்றுமழுகதி றெறிப்பவெழு செஞ்சோதிபூ, டிளமதியினைப்பது
ன் திருமுகச்செவ்விவேட் டெழுநாத் தலைத்தவமவன், புரிவதுகடுக்கு
மதுராபுரிமடக்கிள்ளை பொன்னூசலாடியருளே, புழுகுநெய்ச்சொ
க்கர்திரு வழகினுக்கொத்தகொடி பொன்னூச லாடியருளே... (௫)

கங்கைமுடி மகிழ்நர்திரு வுளமசைந்தாடக் கலந்தாடு பொன்னூ
சலக், கடவுளிருநோக்கத்து நெக்குருகியிட்டதின் கடைக்கணோக்கத்து
மற்றச், செங்கண்விடையவர் மனமுமொக்கக்கனாந் துருகு செய்கை
யவர் சித்தமேபொற், றிருவூசலாவிருந் தாடுகின்றுயெனுஞ் செய்தி
யை யெடுத்துரைப்ப, அங்கணெடுநிலம்விடர் படக்கிழிந் தோடுவே
ரடியிற் பழுத்தபலவின், அளிபொற்சுளைக்குடக் கனியுடைந்தூற்றுதே
னருவிபில மேழுமுட்டிப், பொங்கிவழிபொழின்மதுர மதுரைநாய
கித்திருப்பொன்னூசலாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகி
னுக்கொத்தசொடிபொன்னூசலாடியருளே .......................(௬)

சேர்க்குஞ்சுவைப்பாடலுந்தொழுக வொழுகுபொற்றிருவூசல்
பாடியாடச், சிவபிரான்றிருமுடியலைசப்பழுமிமேற்பொங்குசெங்க
ணாவரசகிலம்வைத், தார்க்கும்பணுடைவிபசைப்பச்சர்சாமு டிலைசகி
ன்றதம்மனையசைந், தாடலாலண்டமுமகண்டபகிரண்டமுமசைந்தா
டுகின்றதேய்ப்பக், கார்க்கொந்தளக்கோதைமடவியர்குழற்கூட்டுகம
ழ்நறும்புகைவிண்மிசைக், கைபறந்தெழுவதுருமாதிரவிமண்டலங்கை
க்கொளவிருப்படலம்வால், போர்க்கின்றதொக்குமதுராபுரி மடக்கி
ள்ளை பொன்னூசலாடியருளே, புழுகுநெய்ச்சொக்கர்திருவழகினுக்

தேர்க்கோலமோடு நின்றிருக்கோலமுங்கண்டு சிந்தனைபுழுங்கு
கோபத், தீயவியமூண்டெழுங் காமானலங்கான்றசிலைகையென வெழுந்
தும்பொங்குந், தார்க்கோலவேணியர்தமுள்ளமென்னவேபொற்றடஞ்சி
லையுமுருகியோடத், தண்மதிமுடித்ததுப் வெள்விடைக்கொண்மணித
ரித்ததும்விருத்தமாகக், கார்க்கோல்நீலக்கருக்களத்தோலொருவர்செ
ங்களத்தேற்றலமரக், கட்கணை துரக்குங்கரும்புருவவில்லொடொருகை
விற்குனித்துநின்ற, போர்க்கோல்மானதிரு மணக்கோலமான பெண்
பொன்னூசலாடியருளே, புழுகுநெய்ச்சொக்கர்திருவழகினுக்கொத்
தகொடிபொன்னூச லாடியருளே...............................(௭)

குழியும்பசுங்கண் முசுக்கலைவேரிஇச்சிறுகுறம்பலவி லெய்யபா
சக், கொம்பொடிபடத்தூங்குமுட்பறக்கனியில்குடங்கொண்டு நீந்த

ம்மடைவாய், வழியுங்கொழுந்தேனுவட்டெழுதடிங்காவின்வள்ளுகிர்க்கருலிரறகூல், மந்திகளிரிந்தேகும் விசையினில்விசைந்தெழு மரக்கோடுபாயவயிறு, கிழியுங்கலைத்திங்களமுதருவி தூங்குவகிளைத்துவண்டுழுபைந்துழாய்க்,கேசவன்கால்வீசவன்டகோளகைமுகடுகீண்டுவெள்ளருவிபொங்கிப், பொழிபுந்திறத்தினைநிகர்க்குமதுரைத்தலைவிபொன்னூசலாடியருளே, புழுகுநெய்ச்சொக்கர் திருவழகினுக்கொத்தகொடிபொன்னூசலாடியருளே......... ...................... (எ)

ஒல்குங்கொடிச்சிறு மருங்கிற்கிரங்கியேலோதிவண் டார்த்தெழப்பொன், னூசலையுதைந்தாடுமௌவின்மலர் மகளம்மையுள்ளடிக்கூன்பிறைதழீஇ,மல்குஞ்சுவட்டினைவலம்புரிக்கீற்றிதுகொல்வாணியென்றதியரடி, மணிமுறுவல்கோட்டநின்வணங்காமுடிக்கொருவணக்கநேநோண்வழங்கப், பில்குங்குறும்பனிக்கூதிர்க்குடைந்தெனப்பிரசநறைம்மாற்கிளம், பேதையர்களூட்டுங் கொழும்புகை மடுத்துமென்பெடைபொடுவரிச்சுரும்பர், புல்குந்தடம்பணை புடுத்துமதுரைத்தலைவி பொன்னூசலாடியருளே, புழுகுநெய்ச்சொக்கர்திரு வழகினுக்கொத்தகொடி பொன்னூசலாடியருளே........................(அ)

தொன்செய்தசெழுமணித்திருவூசலரமகளிர்கொண்டாடவாடுந்தோறுங், குறுமுறுவனெடுநிலவருந்துஞ்சகோரமாய்க் கூந்தலங்கற்றைற்சுற்றுந், தெல்செய்தமழலைச்சுரும்பராய்மங்கைநின் செங்கைப்பசுங்கிள்ளையாய்த், தேதேவன்பொலிவதெவ்வுருவுமாமவன்திரு வுருவின்முறைதெரிப்ப,மின்செய்தசாயலவர்மேற்றலத்தாடியவிளைப்புனலினருவிகுடையும், வெள்ளானைகுங்குமச்செஞ்சேறுநாற்படமெல்பிடியையஞ்சிநிற்கும், பொன்செய்தமாடமலி கூடற்பெருஞ்செல்வி பொன்னூசலாடியருளே, புழுகுநெய்ச்சொக்கர்திரு வழகினுக்கொத்தகொடி பொன்னூசலாடியருளே........................(கூ)

இருபதமுமென்குரற் கிண்கிணியுமுறைபிட் டிரைத்திடு மரிச்சிலம்பும், இறுமிறமருங்கென் றிரங்குமேகலையும்பொ னெழுதுசெம்பட்டுவீக்குந், திருவிடையுமுடைதார மும்மொட்டியாணமுஞ் செங்கைப் பசுங்கிள்ளையும், திருமுலைத்தாளவுத்தரீயமும்மங்கலத் திருநாணுமழகொழுகநின், றருள்பொழியுமதிமுகமுமுசமதியினெடுநில்வரும்புகுறுநகைபுஞான, ஆனந்தமாக்கடல்குடைந்துகுடைமரகத் தொடமராடுமோட்டரிக்கட், பொருகயலுவடிவழகுபூத்தசுந்தரவல்லிபொன்னூசலாடியருளே,புழுகுநெய்ச்சொக்கர்திருவழகினுக்கொத்தகொடி பொன்னூசலாடியருளே...................................(௰)

ஊசற்பருவம் - முற்றிற்று.

---

ஆ பருவம்-௰-இ - விருத்தம் - ௱உ.